திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குகின்றபோது நாம் ஒரு அக்ரிமென்ட் செய்கிறோம். விவசாயிகள் ஏதாவது தவறு செய்தால் அதற்காக அபராதத் தொகை, கட்டணம் எல்லாம் வசூலிக்கப்படுகிறது. ஆனால் இன்றைக்கு வோல்டேஜ் குறைவாக இருப்பதன் காரணமாக மோட்டார்கள் தீய்ந்து போய் விடுகின்றன. அதன் காரணத்தால் விவசாயிகள் இன்றைக்கு அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், பயத்தோடு இருக்கிறார்கள். ஆகவே, தீய்ந்து போன மோட்டார்களுக்காக மின்சார வாரியம் அவர்களுக்கு நட்ட ஈடு கொடுக்கக்கூடிய முறையிலே ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. சி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதற்காக நட்ட ஈடு தரா விட்டாலும் மின்வசதி வழங்குவதில் நட்டம் வந்து கொண்டுதான் இருக்கிறது.

(ஆ) திருவில்லிப்புத்தூர் தொகுதியில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் துணிகள் தேங்கிக் கிடப்பது குறித்து.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, திருவில்லிப்புத்தூர் தொகுதியில் உள்ள 21 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் ரூபாய் 40 இலட்சத்திற்கும் அதிகமான துணிகள் தேங்கிக் கிடப்பது குறித்து மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் திருவில்லிப்புத்தூரில் மட்டும் இருபதுக்கு மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. 50 சதவீதத்திற்கு மேல் கூட்டுறவின் கீழ் இங்கே கைத்தறி நெசவாளர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

இப்பொழுது தேங்கிக் கிடப்பதாகச் சொல்லப்படும் அளவு இயல்பானதே. இந்தத் தேக்கம் இரண்டு மாத உற்பத்தியின் அளவாகவே இருக்கிறது.

மூன்று மாதங்களுக்கு மேல் உற்பத்தி செய்யப்பட்ட கைத்தறி துணிகள் பொதுவாகத் தேங்க ஆரம்பித்துவிடும்பொழுதுதான், ஓர் அசாதாரணமான சூழ்நிலை உருவாகிவிடும். இப்படி ஓர் அசாதாரணமான சூழ்நிலை உருவாவதைத் தடுக்கும் பொருட்டு 'கோ ஆப்டெக்ஸ்' பெரும் அளவில் கொள்முதல் செய்து, கூட்டுறவு சங்கங்களுக்குத் தக்க சமயத்தில் உதவி செய்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் கோ ஆப்டெக்ஸ் நிறுவனம் அதிக அளவில் கொள்முதல் செய்து விற்பனை செய்து வருவதை நாம் நன்கு அறிவோம்.

[திரு. கே. இராஜா முகமது] [1978 மார்ச் 16

கூட்டுறவு அமைப்பின் கீழ் வரும் கைத்தறி நெசவாளர்களின் எண்ணிக்கையும் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டு போவதால், உற்பத்தியும் அதிகரித்துக் கொண்டு செல்கிறது.

விற்பனை நிலையங்களை நவீனப்படுத்துதல், இந்தியாவில் உள்ள முக்கிய நகரங்களில் மேலும் பல புது விற்பனை நிலையங்களைத் துவக்குதல் புது டிசைன்கள் மற்றும் பாலிஸ்டர் நைலான் பிளென்ட் துணிகளைத் தயாரித்தல், பிரின்டட் சேலைகளை நவீன டிசைன்களில் தயார் செய்தல் ஆகிய முயற்சிகள் மேற்கொள்வதன் மூலம் கைத்தறித் துணிகளை தேக்கமில்லாது விற்பனை செய்ய முடியும் என்று அரசு நம்புகிறது.

துரிதமாக விற்பனையாகும் பாலிஸ்டர் துணிகளை நெய்யும் பணியை திருவில்லிப்புத்தூர் மற்றும் திருவில்லிப்புத்தூரைச் சுற்றியுள்ள வட்டாரங்களுக்கு கொடுக்க இருப்பதால், விற்பனைக்யில் சுணக்கமோ, உற்பத்தியான துணிகளின் தேக்கமோ இருக்காது என நம்பலாம்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே இந்தப் புதிய அரசு துவக்கப்பட்ட நாளில், ஒரு நாள் ஸ்ரீவில்லிபுத்தூரில் இப்படி இலட்சக்கணக்கான ரூபாய்க்கான துணிகள் தேக்கம் அடைந்து, நெசவாளர் பிரதிநிதிகளை அழைத்துக் கொண்டு கைத்தறி அமைச்சரவர்களிடம் நான் சென்றபொழுது கைத்தறித் துணிகளை கொள்முதல் செய்ய அமைச்சரவர்கள் உத்தரவிட்டார்கள். அதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துணித் தேக்கம் என்பது ஸ்ரீவில்லிபுத்தூரில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நடந்து கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் கோவாப்டெக்ஸ் முறையில்லாமல் கொள்முதல் செய்வதுதான். ஸ்ரீவில்லிப்புத்தூரில் ஒரு மாதம் விட்டுத்தான் கொள்முதல் ஆகிறது. ஆகவே, மாதம் ஒருமுறை கொள்முதல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாதம் ஒருமுறை கோவாப்டெக்ஸிலிருந்து கொள்முதல் செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கங்கள் துணி உற்பத்தியில் எந்த அளவிற்குத் தீவிரமாக ஈடுபடுகின்றனவோ அதைப் போல் விற்பனை செய்வதிலும் கவனம் செலுத்தினுல் இப்படிப்பட்ட பிரச்னைகளுக்கு இடமில்லை. கோவாப்டெக்ஸ் நிறுவனம் சிறப்புத் தள்ளுபடி வழங்கும் காலங்களில் பெரும் கொள்முதல் செய்கிறது. மற்ற இடங்களில் தேவையையொட்டி விற்பனை நிலையங்களில் எந்தெந்தத் துணி குறைவாக இருக்கிறதோ அதைக்

கொள்முதல் செய்கிறோம். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தான் கொள்முதல் செய்ய வேண்டுமென்ற விதியோ, கட்டாய நிலையோ கிடையாது. தேவையையொட்டிக் கொள்முதல் செய்து வருகிறோம். கூட்டுறவுச் சங்கங்கள் அவர்கள் உற்பத்தி செய்யும் துணிகளைத் தாங்களே விற்பனை செய்வதற்கு அக்கறை செலுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(6) 1978–79-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 15—காவல் துறை—மற்றும்

(ஆ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்—தொடர்ச்சி.

*திரு. இரா. அமிர்தராஜ் : சட்டப் பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வரவர்களின் காவல் துறை, தீ அணைப்புப் பணிகள் குறித்த மானியக் கோரிக்கைகளைப் பாராட்டிப் பேசுகின்ற வாய்ப்பு தந்தமைக்காக என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை).

நேற்றைய தினம் பேசிய உறுப்பினர்களெல்லாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தான் காவல் துறையிலே குறுக்கீடுகள் செய்வதாக எல்லாம் குறிப்பிட்டார்கள். இந்த நேரத்திலே நான் ஒன்றைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருச்சி மாவட்டம் அன்பிலில் நடந்த கொலை வழக்கில் முதலாவதாகக் கொடுக்கப்பட்ட எப். ஐ. ஆர். என்று சொல்லப்படும் முதல் தகவல் அறிக்கையில் முன்னாள் அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்களுடைய மாமனாரின் பெயர் இடம் பெற்றிருந்தது. ஆனால் வழக்கு மன்றத்திலே வழக்கு தொடரும் நேரத்தில் அவருடைய பெயர் அங்கே எடுபட்டுப் போய் மற்றவர்கள் மீது வழக்கு தொடர்ந்த காரணத்தினால் அந்த வழக்கு நிருபிக்கப்படாமல் போனதோடு மட்டுமல்ல, அந்த வழக்கின் தீர்ப்பை வழங்கும் நேரத்தில் நீதிபதி அவர்கள் இந்த வழக்கில் உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடிக்க முடியாமல் போனதற்குக் காரணமே முதலில் அறிக்கையில் சேர்க்கப்பட்ட பெயர்